# DEPARTMENT OF TAMIL

**கே.எம்.ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறைச் சார்பாக பெருந்தலைவர் காமராசரின் பிறந்த தினம் கல்வி வளர்ச்சி நாளாக 15.07.2025 அன்று கொண்டாடப் பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் சி.தண்டபானி அவர்கள் காமராசர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.**





**காமராசரின் பிறந்த தினம் கல்வி வளர்ச்சி நாள - 15.07.2025**

கே.எம்.ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறைச் சார்பாக மகாகவி சி.சுப்பிரமணிய பாரதியார் பிறந்த தினம் 11.12.2025 அன்று கொண்டாடப் பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் சி.தண்டபானி அவர்கள் பாரதியார் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.




மகாகவி சி.சுப்பிரமணிய பாரதியார் பிறந்த தினம் 11.12.2025

**கே.எம்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை தமிழ் இலக்கிய மன்றத்தின் சார்பாக மாணவர்களுக்ககடையே கவிதை மற்றும் கட்டுரைப் போட்டிகள் 12.01.2026 அன்று நடைபெற்றது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தமிழ் இலக்கிய மன்றப் பெருவிழாவில் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப் பெற்றது.**





கே.எம்.ஜி.கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த் துறை சார்பில் தமிழ் இலக்கிய மன்ற பெருவிழா 31.01.2026 அன்று கல்லூரியின் கலையரங்கத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது . கல்வி நிறுவனங்களின் மேலாண்மை அறங்காவலர் கே.எம்.ஜி.பாலசுப்பிரமணியம் , தலைவர் கே.எம்.ஜி.சுந்தரவதனம், செயலர் கே.எம்.ஜி.ராஜேந்திரன், பொருளாளர் கே.எம்.ஜி.முத்துகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்த்துறைத்தலைவர் முனைவர்

ஜா.ஜெயக்குமார் அனைவரையும் வரவேற்றார். கல்லூரியின் முதல்வர் முனைவர் சி.தண்டபானி தலைமையுரை நிகழ்த்தினார். கல்லூரியின் கல்வி புல முதன்மையர் முனைவர் த.மணிகண்டன் சிறப்பு விருந்தினருக்கு சிறப்பு செய்தார். தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் மா.ஜெயக்குமார் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார். கவிஞர் முனைவர் தமிழ்ச்செம்மல் ச.இல்குமிபதி (எ) வாரியார்தாசன் "இன்று புதிதாய்ப் பிறந்தோம்" என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தி, தமிழ் இலக்கிய மன்றத்தின் சார்பில் நடைபெற்ற கட்டுரை மற்றும் கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார். தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் வெ.வளர்மதி நன்றியுரை கூறினார். இந்நிகழ்வில் முதலாமாண்டில் பயிலும் 500 க்கும் மேற்பட்ட மாணவ - மாணவிகள் பங்கேற்றனர். இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை முனைவர் ரா.சே.பாலாஜி, முனைவர் மு.ராதா, முனைவர் ச.கவிதா ஆகியோர் ஒருங்கிணைப்பு செய்தனர்.. பேரா.சங்கீதா மற்றும் முனைவர் வே.சரளா ஆகியோர் நிகழ்வைத் தொகுத்து வழங்கினர்.




கே.எம்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி
IQAC


கே.எம்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி
IQAC